# பொம்மை என்பது பொம்மை மட்டுமே அல்ல!

உங்கள் குழந்தை வயிற்றில் இருந்த போதே பார்த்துப் பார்த்து வாங்கி வைத்த பொம்மைகள்...

குழந்தை பிறந்ததும் தேடித் தேடி வாங்கிக் கொடுத்த பொம்மைகள்...

இன்னும் உங்கள் உறவுகள், நண்பர்கள், சுற்றத்தார் எனப் பலரும் வாங்கிக் குவித்த பொம்மைகள்...

இப்படி உங்கள் வீட்டின் ஏதோ ஒரு மூலையை சிலபல பொம்மைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும். உங்கள் குழந்தைகள் பொம்மை வைத்து விளையாடும் வயதைக் கடந்த பிறகும் கூட அப்புறப்படுத்த மனமின்றி அல்லது நேரமின்றி நீங்கள் வைத்திருக்கும் அந்த பொம்மைகள் உங்கள் அன்பைப் பகிரப் பயன்பட்டால்?

ஆதரவற்ற, ஏழைக் குழந்தைகளுக்கு எப்போதும் பழைய ஆடைகளையும் இனிப்பு மற்றும் உணவையும் மட்டுமே கொடுக்க நினைக்கிற பலருக்கும், உபயோகமில்லாத பொம்மைகளையும் கொடுக்கலாம் என்பது புதிய சேதியாக இருக்கும். அப்படியொரு வித்தியாச முயற்சிக்கு வித்திட்டிருக்கிறார் உளவியல் ஆலோசகரும், ஜீவன் ஃபவுண்டேஷனின் பிராஜக்ட் கோ ஆர்டினேட்டருமான வசந்தி பாபு.



வசந்தி பாபு

# அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்!

**"பொம்மைகளைக் கையில வாங்கினப்ப அந்தப் பிள்ளைங்களோட முகத்துல சந்தோஷத்தைப் பார்க்கணுமே... அதைப் பார்த்து நாங்க பூரிச்சுப் போனோம்..."**

"என்னோட ஒரு வயசு பேரன் ஆருஷ்க்காக வாங்கின பொம்மைகள் ஒரு கட்டத்துல வீடு கொள்ளாம குவிஞ்சு கிடந்தது. அவன் யூகே. போனதும், அத்தனை பொம்மைகளும் விளையாட ஆளில்லாம வெறுமையா கிடந்தது.

பொம்மையே இல்லையேனு ஏங்கின காலம் மாறி, 'வீடு முழுக்க குப்பை மாதிரி பொம்மைகள் குவிஞ்சு கிடக்கு... என்ன செய்யறதுனு தெரியலை'ங்கிற புலம்பலைப் பரவலா கேட்டேன். திடீர்னு ஒரு யோசனை... ஆதரவில்லாத குழந்தைகளுக்கு எப்போதும் உணவோ, உடையோதான் கொடுப்போம். எல்லாரும் உடைகளை கொடுத்து, போதும், போதுங்கிற அளவுக்கு சேர்ந்திருக்கும். அந்தக் குழந்தைகளுக்குக் கிடைக்காத எத்தனையோ விஷயங்கள்ல பொம்மைகளும் ஒன்று. அதுலயும் ஓரளவு வசதி படைச்ச வீட்டுக் குழந்தைங்க விளையாடற நல்ல பொம்மைகளை எல்லாம் அந்தக் குழந்தைங்க பார்த்திருக்கவே வாய்ப்பில்லை. முதல் கட்டமா என் பேரனோட பொம்மைகளை ஏழைக் குழந்தைங்களுக்குக் கொடுக்கறதுனு முடிவு பண்ணினேன். என் விருப்பத்தைக் கேட்டதும், நான் ஈடுபட்டிருக்கிற ஜீவன் ஃபவுண்டேஷன் அமைப்பு, என் நண்பர்கள், என்னைச் சார்ந்தவங்கனு பலரும் அதுக்கு முன்வந்தாங்க. எங்களோட 'டாய் டிரைவ்' முயற்சியை கிறிஸ்துமஸ் அன்னிக்குத் தொடங்கினோம். சாலையோரத்துப் பிள்ளைங்களுக்கும், கை, கால் வளர்ச்சியில்லாத குழந்தைங்களுக்கும் அடைக்கலம் கொடுக்கிற ஒரு அமைப்புல கிறிஸ்துமஸ் கொண்டாடி, அவங்களுக்கு உணவு கொடுத்து, கூடுதலா பொம்மைகளையும் கொடுத்தோம். அந்த பொம்மைகளைக் கையில வாங்கினப்ப அந்தப் பிள்ளைங்களோட முகத்துல சந்தோஷத்தைப் பார்க்கணுமே... அதைப் பார்த்து நாங்க பூரிச்சுப் போனோம்.

முதல் முயற்சியைக் கேள்விப்பட்டு, நல்ல மனசு கொண்ட இன்னும் சிலர் எங்களோட சேர்ந்தாங்க. இதுல பிரபலங்களும் அடக்கம். சும்மா தானமா தானே கொடுக்கப் போறோம்னு யாருமே உடைஞ்ச பொம்மைகளையோ, வேலை செய்யாத, உபயோகப்படுத்த முடியாத பொம்மைகளையோ கொடுக்கலை. காஸ்ட்லியான, நல்ல நல்ல பொம்மைகளை மனசார கொடுத்தாங்க. ஸ்பைடர்மேன், பார்பி டால், பென் 10, டெடி பியர்னு புத்தம் புதுசா குவிஞ்ச பொம்மைகளைப் பார்த்து நாங்களே நெகிழ்ந்து போயிட்டோம். கிறிஸ்துமஸை அடுத்து, நியூ இயர், பொங்கல் கொண்டாட்டங்கள்லயும் மறுபடி பொம்மைகளைப் பகிர்ந்துக்கிட்டோம். அந்தந்த வயசுப் பிள்ளைங்களுக்கு ஏத்தபடி, பொம்மைகளைப் பிரிச்சுக் கொடுத்தோம்.





'எங்கக் குழந்தைங்ககிட்ட விஷயத்தைச் சொன்னோம். அவங்களே ஆர்வமா தங்களோட பொம்மைகளை எடுத்துக் கொடுத்தனுப்பினாங்க'னு பெற்றோர் சொன்னப்ப, அந்த அன்பு சிலிர்க்க வச்சது. குழந்தை இல்லாத தம்பதிகளும் தங்களை இதுல இணைச்சுக்கிட்டு, புதுசாவே பொம்மைகள் வாங்கிக் கொடுத்தது அன்பின் உச்சம்...'' - நெகிழ்ச்சியாகப் பேசுகிற வசந்தி பாபுவுடன் அன்பைப் பகிர நினைக்கிற யாரும் கை கோர்க்கலாம். (தொடர்புக்கு: 9841212442)